03.02.2026.

EA.05/2026 in EP.37/2024 in O.S.No. 33/2007

PW1- தங்கபாண்டி – த/பெ.முத்தையா நாடார்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 03.02.2026

<u>குறுக்கு விசாரணை :</u> ( எதிர்மனுதாரர் தரப்பில்)

1. அசல் வழக்கில் தீர்ப்பு வழங்கிய விவரம் தெரியுமா என்றால் ஏதோ தீர்ப்பு வழங்கி உள்ளார்கள்.

2. தீர்ப்பின் பேரில் மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை.

3. தபசில் சொத்து அயன் புஞ்சை சர்வே எண்.382 ல் கண்டுள்ளது என்றால் சரிதான்.

4. சர்வே எண்.382 ஆனது ஆதியில் ஜெயபாலன் துரைசாமி என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான்.

5. சர்வே எண்.382 ல் மேல் பக்கம் 11 லிங்ஸ்–ம், கீழ்பக்கம் 15 லிங்ஸ் அகலமுள்ள இடத்தை தென்வடல் நடைபாதையின் மையப்பகுதியில் என் அப்பாவிற்கு கிரையம் கொடுத்தார் என்றால் சரிதான். அந்த தென்வடல் பாதையானது சர்வே எண்.382/6 என வகைப்பாடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

6. நடைபாதை சம்மந்தமாக ஆசைத்தம்பி மற்றும் செல்வின் துரை ஆகியோர் வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான்.

7. அசல் வழக்கில் நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்யக்கோரி மனு தாக்கல் செய்தேன் என்றால் சரிதான்.

8. நான் தாக்கல் செய்த மனுவில் நீதிமன்ற ஆணையர் அளவீடு செய்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்தார் என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படுவது தாவா 33/2007 ல் வழக்கறிஞர் திரு.K. பாஸ்கர் என்பவரால் தாக்கல் செய்யப்பட்ட நீதிமன்ற ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடத்தின் வழக்கறிஞர் கையிருப்பு நகல் என்றால் சரிதான். வழக்கறிஞர் ஆணையாளர் திரு.K. பாஸ்கர் என்பவரால் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கை மற்றும் வரைபடம் எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டது.

9. வழக்கறிஞர் திரு.K. பாஸ்கர் ஆணையராக அளவீடு செய்யும் போது என் இடத்தின் 20 சென்டையும் அளவீடு செய்தார் என்றால் சரிதான்.

10. வழக்கறிஞர் திரு.K. பாஸ்கர் ஸ்தல பார்வையிடும் போது என் இடம் காலிமனையாக இருந்தது என்றால் சரியல்ல கட்டிடம் கட்ட ஆரம்பித்தேன்.

11. அசல் வழக்கில் செல்வின்ராஜ் மற்றும் ஆசைத்தம்பி ஆகியோர் பாதையை ஆக்கிரமித்ததாக நான் கட்சி செய்தேன் என்றால் சரிதான்.

12. வழக்கிற்கு பின்னிட்டு ஆசைத்தம்பி மற்றும் செல்வின்ராஜ் எந்த கட்டுமானமும் செய்யவில்லை என்றால் ஆசைத்தம்பி கட்டுமானம் கட்டியுள்ளார்.

13. செல்வின்ராஜ் வீட்டின் சுற்றுச்சுவர் அசல் வழக்கு காலத்தில் எவ்வாறு இருந்ததோ அதே இடத்தில் தான் தற்போது வரை சுற்றுச்சுவர் இருக்கிறது என்றால் சரிதான் அந்த சுற்றுச்சுவரானது பாதையை ஆக்கிரமித்து கட்டப்பட்டது. அதே கட்சியை தான் நான் தாவா வழக்கிலும் செய்தேன் என்றால் சரிதான்.

14. அசல் வழக்கில் நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடத்தின் படி செல்வின்ராஜ் எந்த ஆக்கிரமிப்பும் பாதையில் செய்யப்படவில்லை என அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல அது சரியாக அளவீடு செய்யப்படவில்லை.

15. எ.ம.சா.ஆ.1 அறிக்கையில் செல்வின்ராஜ் சுற்றுச்சுவருக்கு கிழக்கே 2.2 மீட்டர் அகலத்தில் தென்வடல் பாதை இருப்பதாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான் அது தவறான அறிக்கை ஆகும்.

16. ம.சா.ஆ.2 அறிக்கையில் செல்வின்ராஜ் சுற்றுச்சுவருக்கு கிழக்கே 1.4 மீட்டர் அகலத்தில் தென்வடல் பாதை இருப்பதாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த மீதமுள்ள 0.8 மீட்டரானது எனக்கு பாத்தியப்பட்ட இடம் எனக் கோரி நான் சுற்றுச்சுவர் அமைத்துள்ளேன் என்றால் சரிதான்.

17. அந்த 0.8 மீட்டர் சுற்றுச்சுவர் அமைக்கும் போது தான் எனக்கும், ஆசைத்தம்பிக்கும் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான்.

18. என்னிடம் காட்டப்படும் 7 புகைப்படங்கள் என் இடத்தின்

புகைப்படம் என்றால் சரிதான். சாட்சி குறுக்குவிசாரணையில் புகைப்படத்தை ஒப்புக்கொண்டபடியாலும் புகைப்படங்கள் 7 எ.ம.சா.ஆ 2 ஆக 7 வரிசைகளில் குறியீடு செய்யப்படுகிறது. புகைப்படங்களுடன் புகைப்படம் எடுத்ததற்கான பென்ட்ரைவ் தாக்கல் செய்யப்படுகிறது.

19. 1வது புகைப்படத்தில் என் வீட்டின் சுற்றுச்சுவருக்கும், மின் கம்பத்திற்கும் இடையே ஒரு அளவுக்கல் உள்ளது என்றால் சரிதான். அந்த அளவுக்கல் என் வீட்டில் மேல்பக்கம் அளவிடும் அளவுக்கல் என்றால் சரிதான். ஆனால் அந்த அளவுக்கல்லை யாரோ புடுங்கி வேறு இடத்தில் வைத்துள்ளார்கள்.

20. எ.ம.சா.ஆ.1 ஆணையர் அறிக்கையில் மின் கம்பம் எனது வீட்டு சுற்றுச்சுவரின் கீழ்ப்பக்கம் உள்ளவாறு துலங்கும் என்றால் சரியல்ல.

21. தற்போது புகைப்படம் 5ல் என் வீட்டு கம்பத்தை ஒட்டி ஓர் மாடிப்படிக்கட்டு செல்வது துலங்கும் என்றால் சரிதான். அது யாருடைய மாடிப்படி என்றால் என் கட்டிடத்தின் மாடிப்படி. என் கட்டிடத்தை கட்டும் போது நான் உள்ளூர் நிர்வாகத்தில் கட்டிட வரைபட அனுமதி பெற்றேன் என்றால் சரிதான்.

22. என்னிடம் காண்பிக்கப்படுவது என் கட்டிடத்தின் கட்டிட வரைபட அனுமதி என்றால் சரிதான் அந்த வரைபட அனுமதியானது என் மகனால் விண்ணப்பித்து பெறப்பட்டது. என் கட்டிடத்தின் கணினிவழி பதிவிறக்கம் செய்யப்பட்ட அனுமதி வரைபடம் எ.ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டது.

23. என் கட்டிடத்தின் கிழக்கு பக்கம் 15 லிங்ஸ் நடைபாதை உள்ளது என்றால் சரிதான்.

24. என் கட்டிடத்தின் கிழக்கு பக்கம் 3.8 மீட்டர் அகலத்தில் நடைபாதை உள்ளதாக ம.சா.ஆ.2 உள்ளது என்றால் சரிதான்.

25. நான் என் கட்டிடத்தின் கிழக்கு பக்கம் வெள்ளை அடிப்பதற்காக 1.1/2 அடி முதல் 2 அடி அளவில் காலி இடம் விட்டுள்ளேன் என்றால் சரிதான்.

26. நான் என் கட்டிடத்தில் கழிவுநீர் செல்வதற்காக கீழோரமாக வாறுகால் அமைத்துள்ளேன் என்றால் சரிதான்.

27. வாறுகாலுக்கு கிழக்கு பக்கம் 15 லிங்ஸ் பாதை உள்ளது என்றால் சரிதான். பாதைக்கு கிழக்கு பக்கம் யார் உள்ளார்கள் என்றால் எனக்கு தெரியாது.

28. நான் முதல் விசாரணையில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் தவறு என்றும் பாதையை நான் ஆக்கிரமித்துள்ளேன் என்றும் அதை அகற்றிக்கொடுக்க கடமைப்பட்டவர் என்றும் நான் பொய் கட்சி செய்வதால் என் மனுவானது தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

29. நான் வழக்கிற்காக ஆசைத்தம்பி தீர்ப்பிற்கு பின்னிட்டு தவறாக கட்டிடம் கட்டிவிட்டதாக கூறுகின்றேன் என்றால் சரியல்ல.

30. அசல் வழக்கில் என் தரப்பில் செய்யப்பட்ட கட்சியை மீண்டும் நான் நிறைவேற்றும் மனுவில் கட்சி செய்ய சட்டப்படி கடமைப்பட்டுள்ளேன் என்றும் மேல்முறையீடு செய்யாததால் நிறைவேற்று மனுவினை அனுமதிக்க வேண்டும் என்றும் என் கட்சியை நிராகரித்து நிறைவேற்று மனுவை அனுமதிக்கவேண்டும் என்றும் சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

ஒம்/—J.ராஜேஷ்குமார்
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தென்காசி